# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,929 — 1932 ம் ௵ ஆனி௴ 10 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பள்ளிக்குடியிருப்பு பள்ளிக்கூடத்துக்கான என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது:—

பிரதமப்படத்து இல. 6,651. குறிச்சி—பள்ளிக்குடியிருப்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | புளியடிவெட்டை அல்லது பள்ளிவளவு .. | துறந்த வெறு நிலம் .. | வெஸ்லியன் மிஷன் திருகோணமலை .. | 2 | 2 | 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஆடி மாசம் 4 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு திரிகோணமலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1932 ம் ௵ ஆனி௴ 7 ந் உ.

எவ். சீ. ஜீம்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

### காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல் நி. 115 (கேகாலை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைதக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஆண்டு (ஜூன்) ஆனி௴ 10 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஆண்டு (பெப்ரவரி) மாசி௴ 23 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏசென்று.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரத்தை கேகாலை உதவி அரசாட்சி ஏசன்று அவர்களிடமும் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளிலெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க

அட்டவணை.

சப்பிரகாம மாகாணம், கேகாலை டிஸ்திறிக், மூன்று கோறளைகளில் பனவல கோறளை கிழக்கைச் சேர்ந்த அம்பலம் பிற்றியா என்னுங் கிராமத்திலிருக்குங் கீழே சொல்லப்படும் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 4,160.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கலஉடகேனைமூக்கலானைவத்தை அல்லது அத்வல்தோட்டவத்தை அல்லது பாலமகாவவத்தை (கக்குறங்கைடோலாவுக்கு விடப்பட்ட காணி) .. | 0 | 1 | 29 |
| 2 | கலஉடகேனைமூக்கலானைவத்தை அல்லது அத்வல்தோட்டைவத்தை அல்லது பாலமகாவவத்தை .. .. | 2 | 0 | 11 |
| 3 | ஷை (சிறு தெருவுக்கு விடப்பட்ட காணி) .. | 0 | 1 | 0 |
| 6 | கலஉடகேனைமூக்கலானைவத்தை .. | 1 | 3 | 6 |
| 7 | கலஉடகேனைமூக்கலான .. | 31 | 1 | 25 |
| 8 | கலஉடகேனைமூக்கலானைவத்தை . | 2 | 1 | 36 |
| 9 | ஷை (சிறு தெருவுக்கு விடப்பட்ட காணி) .. | 0 | 2 | 5 |
| 10 | கலஉடகேனைமூக்கலானைவத்தை .. | 11 | 1 | 6 |
| 11 | ஷை (சிறு தெருவுக்கு விடப்பட்ட காணி) .. | 0 | 3 | 14 |
| | மொத்தம் .. | 51 | 0 | 12 |

எல்லைகள் : வடக்கு-கலஉடகேனைவத்தையும் (பிரதமபடம் 4,160 காணித்துண்டுகள் 4 ம், 5 ம், சீ. பபாஞ்சியாவால் கூட்டப்பட்டு டி. செரகாமியால் வாதாடப்படும் முடிக்குரிய காணிகள்) கக்குறங்கை டோலாவும்; கிழக்கு-பறக்கடுவாவிலிருந்து மாணிக்கந்தைக்குப் போகும் சிறு தெருவும் சீ. பபற்ஞசியா உரித்தாடும் இகலபல்லெ கண்டெவத்தையும்; மேற்கு-சீ. ஏ. கற்சனவர்கள் உரித்தாடும் தட்டுவலைக்கந்தைத்தோட்டம்.

குறிப்பு.—மேலே கொடுக்கப்பட்ட எல்லைகளுக்குள் ளடங்கிய கீழே கூறப்படும் காணித்துண்டு இவ் வறிவித்தலின் இப்பகுதியிலிருந்து விலத்தப்பட்டும் அதின் விசாலமாகிய 1 றூட் 14 பேட்ச் மேலே கொடுக்கப்பட்ட 51 ஏககர் 12 பேட்சில் சேர்க்கப்படாமலு மிருக்கிறது:—

பிரதமபடம் 3,128.

| காணித் துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கலஉடகேன மூக்கலான என்னும் கல்லெனகாவ கரெசா .. .. | 0 | 1 | 14 |

II.—பிரதமபடம் 3,128.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ | ப. |
|---|---|---|---|---|
| 1 | கலஉடகேன மூக்கலான என்னும் கல்லெனகாவ கரெசா .. .. | 0 | 1 | 14 |

எல்லைகள் : வடக்கும், கிழக்கும்-முடிக்குரிய கலஉடகேனை மூக்கலான; தெற்கு-சி. பபறஞ்சியா உரித்தாடும் அத்வல்தோட்டவத்தை, அறம்பெ; மேற்கு-சீ. பபறஞ்சியா உரித்தாடும் வனுமேரியகேன.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.